**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 139/2019**

**Deposition of Witness for : PW 3**

**Name** : திரு. ராஜசேகர்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14-12-2023.**

**(Accused present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது ஆத்துவாம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரிதான் இறந்து போன சேகரை அடித்தவர். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு மாலை சுமார் 7 மணியளவில் இறந்து போன சேகருக்கும், எதிரிக்கும் வரப்பு சம்மந்தமாக பிரச்சனை நடந்தது. அ.சா.1 ஊரில் வந்து ஆஜர் எதிரி தகராறு செய்வதாக கூறினார். நான் அப்போது வந்து பார்த்த போது ஆஜர் எதிரி சேகரை கொம்பால் தலையில் அடித்து விட்டார். என்னை பார்த்த உடன் எதிரி ஓடிவிட்டார். இறந்து போனவருக்கு தலையில் ரத்தக் காயம் இருந்ததால் 108 ஆம்புலன்சிற்கு சிவக்குமார் என்பவர் தகவல் சொல்லி வரவழைத்தார். சேகரை வேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

இறந்து போன சேகர் எனக்கு மைத்துனர் முறை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கும் எங்கள் ஊருக்கும் இடையே 1 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதிக்கு முன்பாக இறந்து போன சேகருக்கும், எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது. அ.சா.1 பதற்றத்தில் ஓடி வந்து என்னிடம் தெரிவித்தார். அதன் பிறகு நான் வேகமாக 5 நிமிடத்தில் நான் சென்று விட்டேன். என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். நான்

சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், இறந்தவர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- ராஜசேகர்

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 139/2019**

**Deposition of Witness for : PW 4**

| | |
|---|---|
| **Name** | : திரு. முருகன் |
| **Father Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14-12-2023.**

**(Accused present)**

முதல் விசாரணை -

நான் தற்போது ஆத்துவாம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். இறந்து போன சேகரை தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு இறந்து போன சேகருக்கும், எதிரிக்கு வரப்பு தகராறு ஏற்பட்டது. சேகர் என் வரப்பை ஏன் வெட்டுகிறாய் என்று கேட்டதற்கு நான் அவ்வாறு தான் வெட்டுவேன் என்று எதிரி தெரிவித்தார். அதன் பின்னர் எதிரி நீ இருந்தால் தான் கேள்வி கேட்பாய் என்று கூறி கையில் வைத்திருந்த மரக்கொம்பால் நடு மண்டையிலும், பின்னந்தலையிலும் அடித்து விட்டார். உடனே சேகர் மயங்கி விழுந்து விட்டார். எங்களை பார்த்த உடன் ஆஜர் எதிரி போய் விட்டார். சிவக்குமார் என்பவர் 108 ஆம்புலன்சை வரவழைத்து சேகரை வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். இறந்து போன சேகர் என்பவரும் கட்டிட தொழிலாளி என்றால் சரிதான். அவர் பங்காளி முறை. சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் இடத்திற்கும் எங்கள் ஊருக்கும் சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் இடத்திற்கும், எங்கள் ஊருக்கும் செல்ல வேண்டும் என்றால் நடந்து சென்றால் 1/2 மணி நேரம் ஆகும் இரு சக்கர வாகனத்தில் 5 நிமிடத்தில் செல்லலாம். அன்றைய தினம் நாங்கள் நடந்து சென்றோம் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் சென்றோம். முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்களை தான் போலீசார் விசாரணையிலும்

சொன்னேன். சம்பவம் நடைபெறுவதற்கு முன்பு எதிரிக்கும், சேகருக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது. நடந்ததாக சொல்லும் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், சேகர் என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- முருகன்

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.